மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தடுப்புச் சுவர் கட்டுவதற்கு முன்பாக அந்தக் கடலோரப் பகுதியில் ரேண்டம் ரூபிள்ஸ் போட்டுத்தான் சுவர் கட்டுவார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைக் கவனத்தில் கொண்டு பரிசீலித்து ஆவன செய்யப்படும்.

திரு. டி. மணி : பேரவைத் தலைவரவர்களே, இதுபோன்று 1981 ஆரம்ப காலத்திலே தூத்தூரை என்னும் பகுதியில் இரணியன் துறை கடற்கரையில் இருக்கின்ற ஒரு மாதா கோவில் வரையிலும் கடலரிப்பினால் குந்தகம் ஏற்பட்டிருக்கிறது. அது மட்டு மல்லாமல், நூற்றுக்கும் அதிகமான வீடுகள் இந்தக் கடலரிப் பினால் பாதிக்கப்பட்டு, மீனவத் தொழிலாளர்கள் வீடிழந்திருக் கிறார்கள். அந்தப் பகுதியில்கூட இந்த நிதியாண்டில்கடலரிப்பைத் தடுத்து அவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ், என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு பரிசீலிக்கும்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

தமிழகத்தில் முதியோர் உதவித் தொகை மூலம் பயன் பெறுவோர் எண்ணிக்கை.

*வினா எண் 59— திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981 டிசம்பர் இறுதியில் தமிழகத்தில் "முதியோர் உதவித் தொகை பெறுவோர் எண்ணிக்கை எவ்வளவு ?

1982 செப்டம்பர் 10]

(ஆ) அதற்கு அரசுக்கு ஆண்டுக்கு ஆகும் செலவு எவ்வளவு?

(இ) 1975–76-ல் முதியோர் உதவித் தொகை பெற்றவர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) தமிழகத்தில் 1981–டிசம்பர் இறுதியில் முதியோர் உதவித் தொகை பெற்ற நபர்களின் எண்ணிக்கை 1,83,870 ஆகும்.

(ஆ) அரசு, முதியோர் உதவித் தொகை திட்டத்தின் கீழ் 1981–1982-ல் நபர் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 464 செலவு செய்தது. இதன்படி 1,83,870 நபர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு அரசு ரூ. 8,53,15,680 செலவு செய்கிறது.

(இ) 1975–76 நிதி ஆண்டில் முதியோர் உதவித் தொகை பெற்ற நபர்களின் எண்ணிக்கை 50,613 ஆகும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர் உதவித் தொகை என்பது எல்லா இடங்களிலும் அதிகமான பேர்கள் மனு செய்திருக்கிறார்கள். இன்றையதினம் உள்ள கொள்கையின்படி, யாராவது இறந்து விட்டால், அதற்குப் பதில்தான் மற்றவர்களை சேர்த்துக் கொள்ள முடியும். அப்படி இல்லாமல் மனுபோட்ட அனைவரையும் சேர்த்துக் கொண்டு அவர்களுக்கும் உதவித் தொகை அளிக்கின்ற வகையில் நிதியை அதிகமான அளவில் ஒதுக்கி, அவர்களுக்கு உதவி செய்ய முயற்சி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதி வாய்ந்த அனைவருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்து அரசுக்கு அனுப்பினால் அதற்குத் தகுந்த அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்க அரசு தயாராக இருக்கிறது.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர் பென்ஷன் வழங்குவதிலே, மதுரையிலே அதிகாரிகள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், ஏற்கனவே ஆண்டுக்கு இவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது, அவ்வளவு பேர்களுக்குத்தான் கொடுக்கமுடியும். இடையிலே ஏற்கனவே பென்சன பெற்றுக் கொண்டிருக்கின்ற யாராவது இறந்துபோனால் அந்த இடத்திலே புதிதாகக் கொடுக்க முடியுமே தவிர, எல்லோருக்கும் கொடுப்பது என்பது இயலாது. என்று சொல்லுகிறார்கள். தகுதி வாய்ந்தவர்களுக்கு சிபாரிசு செய்யப்பட்டும், அந்தப் பென்சன் தொகை பல ஆண்டுகாலமாக இன்னும் கொடுக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா? அவர்களுக்கு விரைவிலே கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஆதாரத்தை வைத்துதான் அரசு ஆவன செய்து வருகின்றது. அதோடு மட்டுமல்லாமல் மாவட்ட ஆட்சித் தலைவர், தகுதி வாய்ந்த அந்த மனுக்கள் வருகின்ற சமயத்தில், அவைகளைப் பரிசீலனை செய்து அவற்றை அரசுக்கு அனுப்பினால், அதைப்பற்றி அரசு பரிசீலித்து கொடுக்க ஏற்பாடுகளைச் செய்யும்.

திரு. ஜீ. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர் தொகை தருகிறபோது, இதைப்பற்றித் தெரிந்தவர்கள் எல்லாம் முதலிலே மனுப்போட்டுவிட்டார்கள். ஆனால் பல கிராமங்களிலே அங்கே உள்ள கிராமசேவக்குகள் சொல்வது கிடையாது.

அந்தப் பகுதியிலே இருக்கின்ற மற்றவர்களும் பொதுமக்களும் எடுத்துச் சொல்லாமல், மலைப் பகுதியிலே வாழ்கின்ற அல்லது ஆந்திரப் பகுதி ஓரமாக நம்முடைய தமிழகப் பகுதியிலே வாழ்கின்ற மக்களுக்கு எல்லாம் இந்தத் திட்டம் தெரியாமல் உண்மையிலேயே வருந்தத்தக்கதாக உள்ளது. முதியோர்களுக்கும் இயலாதவர்களுக்கும் இந்தத் திட்டம் பலன் அளிக்கவில்லை. அவர்கள் மனுப்போட்டால் இதே போன்று 250 பேர்களிலே யாராவது இறந்து போனால் சேர்த்துக் கொள்கிறோம் என்கிறார்கள். எனவே உண்மையிலேயே ஜெனுயன் கேஸ்களாக இருந்தால் அவைகளுக்கு விதிவிலக்குக் கொடுத்து உதவித் தொகை அளிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, அதைப்பற்றி என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் ஆவன செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கின்றது. அதோடு மட்டுமல்லாமல் தகுதி வாய்ந்தவர்களுக்குக் கண்டிப்பாகக் கொடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS

உதவித் தொகை பெறும் ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர் எண்ணிக்கை.

* வினா எண் 60—திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981–1982-ல் அரசால் வழங்கப்பட்ட ஆதரவற்ற விவசாய தொழிலாளர் உதவித் தொகை பெற்றவர்கள் எண்ணிக்கை என்ன ?

(ஆ) வழங்கப்பட்ட தொகை எவ்வளவு ?